**கொத்மலை பிரதேச சபை**

**நுவரெலியா மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து கொத்மலை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் ஜூலை முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 3,385,100 முத்திரைக் கட்டணங்கள் வருமானமாக கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் வருமானத்திற்கு உள்ளடக்கப்படாதிருந்தமையால் மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,385,100 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கணக்கு வைத்தமையால் கணக்கு சமப்படுத்தப்பட்ட முறை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 816,560 நீர்க் கட்டண வருமானம் நிதி செயற்பாடு தொடர்பான கூற்றில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் இவ்வாறு கணக்கு வைத்தமையால் கணக்கு சமப்படுத்தப்பட்ட முறை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் ஒக்தோபர் 13 ஆந் திகதி சபை நிலையான வைப்புக்களாக முதலீடு செய்திருந்த ரூபா 5,000,000 ஆன நிலையான வைப்புகளுக்குரிய ரூபா 126,180 ஆன வட்டி வருமானம் ஆண்டில் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் வருமானக் கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டின வட்டி வருமானம் அப்பெறுமதியால் குறைத்தும் ஆண்டின் கடன்பட்டோர் மீதி ரூபா 252,360 ஆல் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 22,646,698 ஆக இருந்த போதிலும், அது ரூபா 26,986,494 என ரூபா 4,339,796 ஆல் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 42,294,421 ஆக இருந்த போதிலும் அப் பெறுமானம் ஐந்தொகையில் ரூபா 42,299,421 என ரூபா 5,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கணக்கு வைத்தமையால் கணக்கு சமப்படுத்தப்பட்ட முறை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினக் கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 48,626,462 ஆக இருந்த போதிலும், அம்மீதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 46,168,111 எனவும் நிர்மாணக் கடன்கொடுத்தோர் பதிவேட்டில் ரூபா 48,697,529 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி மற்றும் வரி வருமானம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 3,638,259 ஆக இருந்த போதிலும், ஆதனவரி மற்றும் வரி பதிவேட்டின் பிரகாரம் ரூபா 3,514,994 ஆக இருந்தமையால் ரூபா 123,265 ஆன வேறுபாடு அவானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 48,176,643 ஆக இருந்ததுடன், அவற்றில் ரூபா

3,637,708 தொகை ஒரு வருடத்தை விஞ்சிய காலத்திற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 48,626,462 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 3,988,337 தொகை ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கணக்காய்விற்கு தேவையான காணி உறுதிகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 52,101,113 தொகையான 02 கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,420,600 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 10,434,742 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 13,985,858 தொகையான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

நிதி விளைவுகளில் ரூபா 13,985,858 ஆன முன்னேற்றத்திற்கு 2 வருமான விடயங்களில் அதிகரிப்பும் செலவின விடயமொன்றில் அதிகரிப்பும் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 75,100,525 மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 51,819,950 ஆக இருந்தமையால் நடைமுறை விகிதம் 1.45:1 ஆக இருந்தது.

## 2.4 வருமான நிருவாகம்

-----------------------------------

### 2.4.1 ஆதனவரி

-----------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி வருமானம் ரூபா 1,587,290 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 652,789 ஒரு வருட காலத்திற்கு மேலாக அறவிடப்படாமல் காணபப்ட்டது.

### 2.4.2 குத்தகை வாடகை

---------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை குத்தகை வாடகை ரூபா 152,722 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 41,472 ஒரு வருட காலத்திற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

### 2.4.3 ஏனைய வருமானம்

--------------------------------

சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் 2 வீதி புனரமைப்பு செயற்திட்டங்களின் வேலைகள் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 32,164 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,785,750 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 2.5 மிகை விதிப்புக்கள்

------------------------------

பிரதேச சபைச் சட்டத்தின் 172(3) பிரிவின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் கடந்த ஆண்டின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 146,330 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---

(அ) ஹெலபொட மற்றும் மல்தெனிய உப அலுவலகங்களுக்குரிய அரச இல்லங்கள் முறையாக பராமரிக்கப்படாமல் இருந்ததுடன் கட்டிடங்களின் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹரங்கல உப அலுவலக வளவில் நிலத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி இல்லாமையால் சில நார்களால் தற்போது காணப்படும் வேலியை மாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர்.

### 3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

(அ) நிதிக் கூற்றுக்களில் ரூபா 534,402 கிரயத்தில் காண்பிக்கப்பட்டிருந்த நிசான் கரவன் வகை பிணியாளர் வண்டி மற்றும் ரூபா 264,113 கிரயத்தில் காண்பிக்கப்பட்டிருந்த 02 கை உழவு இயந்திரங்கள் என்பன 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் திருத்தம் செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் 138,260 கிரயத்தில் காண்பிக்கப்பட்ட ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் 1½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

---

சபை அதிகாரப் பிரதேசத்தில் 03 வீதி புனரமைப்பு நடவடிக்கைகளின் போது வீதிகளுக்கு இரண்டாவது தார் ஊற்றுதல் வீதி மேற்பரப்பில் கற்கள் முறைப்படி மேவுகை செய்யக்கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்திட்ட தாமதம்

---

சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்த முன்மொழியப்பட்டிருந்த ரதாகல்பொட நீர் முன்மொழிவு செய்தமைக்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,897,315 பெறுமதியான நீர் குழாய்கள் மற்றும் போகஹத்த கலபிட்டிய வீதியை அபிவிருத்தி செய்யும் போது அப்புறப்படுத்தப்பட்ட 4 அங்குலம் அகலமான பல்வேறு வகையான 51 நீர்க் குழாய்கள் 2017 மே 17 ஆந் திகதி

வரையிலும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், நீர் வேலைத் திட்டத்தின் செயற்பாடுகளும் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

**3.5 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

----------------------------------------------------------

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கொஸ்கஹபத்தன மற்றும் ஹபுகஸ்தலாவ கழிவு பொருள் அகற்றும் இடங்களைப் பரீட்சித்த போது முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவம் செய்யப்படாமல் திறந்த வெளியில் கழிவுகள் இடப்பட்டிருந்ததுடன் கழிவுகளுடன் கொண்டு வரப்படும் பொலித்தீன் எரிக்கப்பட்டும் இருந்தன.

**3.6 சுற்றாடல் பிரச்சினை**

-------------------------------------

பிரதேச அதிகாரப் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் இனங்காணப்பட்ட 96 அனுமதியற்ற குடியிருப்புக்கள் காணப்பட்டதுடன். அவை தொடர்பாக 2017 மே 02 ஆந் திகதி வரையிலும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

----------------------------------------------------------------

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

-----------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கபட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் 11 சதவீதம் முதல் 118 சதவீதம் வரையும் 06 செலவின விடயங்களில் 12 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றன.

| **முறைமைகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) வருமான நிர்வாகம் | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | சபைக்கு பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்யாமை மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளை தீர்வு செய்யாமை. |
| (இ) | கணக்கீடு | கணக்காண்டிற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை. |